
12 வது பதினெண் சித்தர் பீடாதிபதி



இந்துமதத் தந்தை
குருமகா சன்னிதானம்
ஞாலகுரு சித்தர் கருவூரர்



மெய்ஞ்ஞானக்கொடி

11 வது பதினெண் சித்தர் பீடாதிபதி



தஞ்சைப் பெரிய
கோவிலைக் கட்டிய சித்தர்
காவிரியாற்றங்கரைக் கருவூரர்

# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை

(உறுப்பினர்களுக்கு மட்டும்) இ ம இ பதிவு எண் 135/83

ஞாலகுரு சித்தர் கருவூரர் எழுதும் [காணிக்கை ரூ 1-00]

## சித்தர் இராமாயணம்

தொடர் கட்டுரை (முன்னுரை)

இன்றைக்கு சித்தர் இராமாயணம் என்ற தலைப்பில் 'ஆய்வுக் கட்டுரைகள்' எழுத நேரிட்டுள்ள அவசிய அவசரத் தேவை நிலைகளைச் சுருக்கமாகக் குறிக்கிறோம் யாம்.

யாம் முழுமையாக மீண்டும் இராமாயணக் கதையை எழுத முன்வர-வில்லை. இன்றைக்கு நாட்டு நடப்பில் வால்மீகி, போதாயனர், துளசிதாசர், நாரதர், கம்பர், புலவர் குழந்தை...... முதலியோர் எழுதிய இராமாயணங்-களே பெரும்பாலும் படிக்கப்பட்டும் பேசப்பட்டும் வருகின்றன. ஆனால் இவைகளுக்கெல்லாம் ஆரம்பமாக, மூலமாக, முதலாக, முதலாவதாக, துவக்கமாக, கருவாக, தாயாக பதினெண் சித்தர்களின் 'இராமாயணம்' 'இராமகாதை, இராவணகாதை, மண்டோதரி வாக்கு (சாபம்)',

'ஞான வாசிட்டம்' (அ) வசிட்டர் காதை, இராவணன் நீதி, சீதை நீதி, விசுவாமித்திரர் நீதி, 'சனகர் அறம்', தசரதன் அறம் 'இராவணன் அறம்' 'வால்மிகி ஞானம்' 'விசுவாமித்திரர் ஞானம்' 'வசிட்டர் ஞானம்', 'சனகர் ஞானம்', 'இராவணன் ஞானம்', 'சீதை ஞானம்', 'மண்டோதரி புலம்பல்', 'இராமன் புலம்பல்', 'சீதை புலம்பல்......... என்று பெயரிடப்பட்டுக் குறிக்கப்படும் அறுபது நூல்கள் இருக்கின்றன. இவற்றினடிப்படையில்தான் பிற்காலத்தே பலரும் இராமாயணத்தைக் கதைகளாக, கவிதைகளாக, காவியங்களாக எழுதினர்.

''......ஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனின் தவறுகளாலும்; வட ஆரியர்களின் சூழ்ச்சிகளாலும்; இமயமலைப் பிராகிருதக் களப்பிறராலும் கங்கைக் கரைப் பாலி மொழிக் களப் பிறர்களலும்... எதிர் பாரா வண்ணம் தமிழ் மொழிப்புலவர்களும், தமிழ்ச் சுவடிகளும், தமிழ்ச்சங்கம் வளர்ந்த மாளிகைகளும் மாட கூடங்களும், மன்றங்களும்...... மதுரை மாநகரும் பேரழிவுக்குள்ளாகி எண்ணூறு ஆண்டுகளாகப் போகின்றன இன்னும் நம் தமிழர்களுக்கு அதிர்ச்சி, அச்சம், ஒற்றுமையின்மை, அன்னியரிடம் அடிமைகளாதல் மொழிப் பற்றின்மை, இனப்பற்றின்மை, நாட்டுப் பற்றின்மை...... முதலிய நலிந்த பண்புகள் இருந்து கொண்டு தானிருக்கின்றன அப்பேரழிவுக்காலத்திலேயே வாழ்ந்து அவற்றின் வீச்சுக்களையும், ஒச்சுக்களையும், தாக்குதல்களையும், ஆட்சிகளையும், ஆளுமைகளையும்...... தடுக்க, அகற்ற நூற்றைம்பது ஆண்டுகளுக்கும் மேலாக முயன்ற பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரரின் அரிய பெரிய சீரிய கூரிய நேரிய...... முயற்சிகள் அனைத்தும் பெரிய தோல்வியையே பெற்று விட்டன இது ஒரு மாபெரும் சாபக்கேடு இனித் தமிழினத்தை உய்விப்பது எப்படி? எவ்வாறு? எவையெவற்றின் வழியாக?... என்ற வினைக்களுக்கு விடை கிடைக்காமலேயே போகுமோ!......

இன்றைய நிலையில் வட ஆரியரின் சூழ்ச்சியால் வேத நெறி எனும் வலைக்குள் அகப்பட்ட மீனுகவும், சமசுக் கிருதம் என்னும் கூண்டுக்குள் அடைபட்ட கிளியா-கவும்; நாட்டைப் பிரித்தும் துண்டாடியும் போட்டி பொருமைச் சண்டைகளால் அமைதியற்ற நிலையில் வைத்தும்...... தமிழர் அல்லாதார் அனைவரையுமே சுரண்டியும், ஏமாற்றியும் கொள்ளையடித்தும் வாழுகிருர்கள் இவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுவது இயலவே இயலாது. ஏனெனில், இவர்கள் தமிழர்களிலேயே தன்னல வெறியர்கள், புகழ் வெறியர்கள், பொருள் வெறியர்கள், பதவி வெறியர்கள் தன்மானப் பிடிப்பற்றோர், தன்னம்பிக்கை இல்லாதோர், கூலிமனத்தார் அடிமையுணர்வுடையார், கங்காணிச் சித்த முடையோர்... என்று அனைத்து வகையான துரோகிகளையும் தேர்ந்தெடுத்துத் தங்களுடைய கையாட்களாகிக் கொண்டு விட்டார்கள் மேலும், இவர்கள், வட ஆரிய வேத நெறி வெறிமிக்க இந்து மதத்தை வலிமையான ஆயுதமாகப் பயன்படுத்தித் தமிழர்களுக்கிடையில் ஒற்றுமையுணர்வோ, மொழிப்பற்றுணர்வோ, இனப்பற்றுணர்வோ, நாட்டுப் பற்றுணர்வோ, துரோகிகளைப் பற்றிய எச்சரிக்கையுணர்வோ, விரோதிகளைப் பற்றிய விழிப்புணர்வோ.... முளைவிடாமல் செய்திடுகிருர்கள். எனவே, இதற்கு ஒரே வழி பதினெண் சித்தர்களின் இராம காதையையும் கண்ணன் காதையையும் உடனடியாகச் சுவைமிக்க பேரிலக்கியங்களாகப் பல்வேறு வண்ணங்களில் (வண்ணம் = வகை, தாலாட்டு அம்மானை, கழங்கு ஊசல்வரி, வள்ளைப் பாட்டு, தெம்மாங்கு, ஒப்பாரி, இசைப்பாடல், நாட்டியப்பாடல், கூத்துப்பாடல், நாடகப்பாடல், காப்பியம்........எனப் பல வகைப்படும்) வடித்தெடுப்பதுதான்......

சந்திர குலத்தாரின் பாரதக்காதை கண்ணன் காதை வடிவப் பட்டிட எடுத்த முயற்சிகள் தோற்றன. இனி இராம காதை வடிவப்பட எடுக்கும் முயற்சிகளால் தான் தமிழன வாழ்வு விழிச்சி, எழுச்சி, செழுச்சி, மலர்ச்சி, உயர்ச்சி......பெற்றிட முடியும்

# குருதேவர்

[இயக்க அறிக்கை]



சொல்லடி நாயனர்
பெரியார் ஈ.வெ.ரா.



போத்தர் மோகன்தாசு
கரம்சந்த் காந்தி



நவநாதசித்தர்
காரல்மார்க்சு



ஞான சித்தர்
ஆதி சங்கரர்

---

**சித்தர் இராமயணம்**
**2ம் பக்க தொடர்ச்சி**

**கால நிலை விளக்கம்:**

கிரேதாயுகத்தில் (17,28080 ஆண்டுகள்) சிவ புராணங்கள், முருக புராணங்கள், சத்தி புராணங்கள், மாபுராணங்கள்...... என்று பலவும் நிகழ்ந்தன. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் நிகழ்ந்தது.

திரேதாயுகத்தில் (12,90000ஆண்டுகள்) இராமாயணம் நிகழ்ந்தது. சூரியகுலத்தார் காகபுசுண்டர்கள் [காக்கையர்கள்] ஆட்சி ஓங்கியது. மானுடர் - அரக்கர் போர் காலம்.

துவாபரயுகத்தில் (8,64,000ஆண்டுகள்) தோற்றத்தார்கள் (அவதாரம்) பதிலிகள், அரக்கர் வாரிசுகள், தேவவாரிசுகள் மாயா சத்தியாளர்கள்......... முதலியோருக்கும் மானுடருக்கும் போர் நிகழ்ந்தது. இது சந்திரகுலத்தின் ஆட்சி.பதினெண் சித்தர்களில் குருபீடமேற்ற கருவூரர் வாரிசுகள் 'குரு குலத்தார்' ஆட்சிக்காலம்

இந்த மூன்று யுகங்களும் கடந்து, கலியுகம், பிறந்து 2000 ஆண்டுகள் கழித்தே வட ஆரியர் இந்தியாவுக்கு வந்தனர்.கலியுகத்தில்தான் வட ஆரியர் (பால் வண்ணம் பழுப்பு மேனியர்) இந்தியா வந்தனர் கலிபிறந்து மூவாயிரமாண்டு கழித்தே, 'தெய்வத் தமிழுக்கே தீங்கு செய்யக் சமசுக்கிருதம் பிறப்பிக்கப்பட்டது.

அறிக்கை: 8 வெளியீடு 26-7-84

இ.ம.இ. பதிவு எண் 135/83
[பண்பாட்டுக் கழகம்]

ஆசிரியர் குழு:

இ ம இ; அ.வி.தி; க.வ.க; அ.ஆ.க; உ.ம.ஆ.கு. முதலியவற்றின் வட்டாரத் தலைவர்கள்

---

தொடர்பு :

1 பரமாச்சாரியார்: நெ. சேவுகன்
C/o காதிவசுத்திராலயம்
கொட்டாம்பட்டி[P. O.] Pin-625103

2 பிறமாச்சாரியார்:
சி. கவிக்குமார் B.Sc.
56 N. G. O. காலனி
பொன்னேரி-601204.

3 தெய்வீகாச்சாரியார் :
சோ. இரவீந்திரன்
C/o சித்தர் E. S. I.
செம்பியம், பெரம்பூர்,
சென்னை-600011

## இராமாயணம் பற்றிய நூல்கள்

I 1. இராவணனுற்றி (இராமன் பாடியது)
 2. மண்டோதரி மகனுற்றி
 3. மண்டோதரி கணவனுற்றி
 4. பரதன் தந்தையாற்றி

II 1. இராவணன் தாலாட்டு. 2. மேகநாதன் தாலாட்டு 3. கும்பகர்ணன் சிந்து (காவடிச் சிந்து)

III 1. இலவகுச இராமகாதைப் பாட்டு 2. இராமகாதைத் தாலாட்டு 3. இராமகாதை ஊசல்வரி 4 இராமகாதை அம்மானை வரி 5. இராமகாதை கானல்வரி ( இராமகாதை கடல்தெம்மாங்கு) தலைப்புவேறுபாடு உண்டு 6. இராமகாதை உலக்கை வரி 7. இராமகாதை கும்மிப்பாட்டு 8. இராமகாதை முழங்குவரி 9. இராமகாதை களிப்பாட்டு [வேலைப்பாட்டு – வேலை செய்யும் போது பாடும் பாடல்] 10. இராமகாதை ஒப்பாரி 11. இராமகாதைப் பரணி,.........

என்று இவ்வாறு எண்ணற்ற நூல்கள் இருக்கின்றன. பெரும்பாலான பெயர்கள் எம் நினைவில் இல்லை இதுபற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ள எமக்கு இளமையில் போதிய வசதி வாய்ப்புகள் கிடைக்கவில்லை யாம் ஆராய்ச்சியாளராக (U. G. C. ResearchScholar) இருந்தபோது தமிழுலக ஆசிரியப் பெருமக்களின ஆதரவோ ஆர்வத் துணையோ கிடைக்கவே இல்லை.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட (சித்தர்களால்) சமசுக்கிருத மொழியில் மூன்ருவது சங்கப் புலவனை புறநானூற்றுப்பாடல் பாடிய வால்மீகி நல்ல புலமைப் பெற்று இராமாயணத்தைச் சுருக்கமாக ஒரு சிறிய காப்பியமாகப் பாடினன். ஆனல் பெயர் ஒற்றுமை கருதி இந்த வால்மீகியே இராமாயணக் காலத்து வால்மீகி என்ற கருத்துக் குழப்பம் தோன்றி முதன் முதல் இராமாயணம் சமசுக்கிருத மொழியில்தான் பாடப்பட்டது என்ற கற்பனை வாதம் ஏற்பட்டு விட்டது ஏறத்தாழ இருபத்தொன்றரை இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னல் வாழ்ந்த இராமனையே சமசுக்கிருத மொழிக்கும், வட ஆரியப் பண்புக்கும் உரியவனுக்கி விட்டார்கள். இப்படி மாபெரும் உகப்புரட்டுகளைச் செய்துதான் வட ஆரியர்கள் தங்களின் வேதப் பண்பாடுகளையும் நாகரிகங்களையும், கொள்கைகளையும் நம்பிக்கைகளையும் தமிழர்களுடைய அனைத்துத் தத்துவங்களிலும், பண்பாடுகளிலும் புகுத்தி மாபெரும் குழப்பத்தையும் சிக்கலையும் உருவாக்கி விட்டனர் இவற்றைச் சித்தகளின் இலக்கியங்களால்தான் சரி செய்ய முடியும்

மண்ணுக்கும் விண்ணுக்கும் இணைப்பாக உள்ள சத்திகள், பேருண்மைகள், மிகப்பெரிய விளக்கச் செயல் நிலைகள்....... என்றபேருண்மைகளை தமிழர்கள் மறந்தால் இம்மண்ணுலக அருளுலகும் பொருளுலகும் இருண்டு போகும். இவர்களை பதினெண் சித்தர் பீடாதிபதி தோன்றி உறக்கத்திலிருந்தும் கிறக்கத்திலிருந்தும் எழுப்பும் வரை இவர்களுக்கு கதை வடிவிலாவது, தமிழ்ப் பண்பாட்டுணர்வு, நாகரீக உணர்வு, ...... முதலியவைகள் நிலைத்து நிற்குமாறு திட்டமிட்டார் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி.

வெந்தச்சோறு, மூவகை இலிங்கங்களுக்கும (இலிங்கம், சிவலிங்கம்-சத்திலிங்கம்) படைத்துண்டு, பின்னர் வெள்ளாடு பலியிட்டுச் சத்தி புராணங்களும் சிவபுராணங்களும்; தேனும், தினை மாவும் முருகனுக்குப் படைத்துண்டு செம்மறியாடு பலியிட்டு முருகு புராணங்களும்; பழம் தேங்காய் பல்வகைத் தேவர்களுக்குப் படையிலிட்டுண்டு; பறவைகள் பலியிட்டு மாபுராணங்களும்... பாடப்பட்ட பாரம்பரியத்தில் கம்பரும் பெருந்தேவனும் தோன்றி முறைப்படி ''இராம தேவரின் கதையையும்; கண்ண தேவர் கதையையும் பாடிடச் செய்தார் பதினேராவது பதினெண் சித்தர் பீடாதிபதி

இதன் படி கம்பர்கள், பரம்பரை வழக்கப்படி ('கம்பர் என்பது குலப் பெயர்; பாடுவது அவர்களது தொழில்) கம்பந்தாள் குடிசையிலும், பந்தலிலும் வாழ்ந்து; கம்பந்தாள் பாயில் துயின்று; கம்பஞ்சோறும் கலவையிறைச்சியும் (பறவை, விலங்கு, மீன, முட்டை, கருவாடு, முருங்கைக்காய், அகத்திக் கீரை சேர்ந்த உணவு) உண்டு சூரியக்குலப் பெருமை கூறும் செய்திகளை இராமகாதையாக வண்ணங்களில் பாடினர்கள்

—தொடரும்.

# உண்மையான இந்து மத உயர்ச்சிக்காக
# வட ஆரிய வேதநெறிக்கு கண்டிப்பு

தொடர்ந்து பல முன்னணிச் செய்தியேடுகள் காயந்திரி மந்தரத்துக்குப் பல தவருன விளக்கங்களை தந்து வருகின்றன. எனவே மீண்டும் நாம் தெளிவான விளக்கம் தருகிறோம்.

தமிழின மறுமலர்ச்சியே இந்துமத விழிச்சியாக! எழுச்சியாக! செழுச்சியாக! உயர்ச்சியாக அமையும்.

இந்து மத மறுமலர்ச்சியே தமிழின விழிச்சியாக, எழுச்சியாக, செழுச்சியாக, உயர்ச்சியாக அமையும்.

இப்பேருண்மையின் அடிப்படையிலே தொடர்ந்து வடஆரியரின் வேத நெறியால் இந்து மதம் நலிந்தும், மெலிந்தும் சிதைந்தும், அருள்நலம் குன்றியும், ஆற்றல் இழந்தும், பயன்குறைந்தும் செல்வாக்கிழந்தும் அடங்கியொடிங்கி அடிமைப்பட்டு கிடப்பதைத் தடுத்து நிறுத்தும் முயற்சி வடஆரிய வேதநெறியின் தவறுகளையும், மடமைகளையும், மாயங்களையும், பொய்களையும், பயனற்ற பழக்கவழக்கங்களையும், மூடநம்பிக்கை மிகுந்த சாத்திற சம்பிரதாயங்களையும், சுரண்டல் போக்குடைய சடங்குகளையும், ஏமாற்று நோக்குடைய வழிக்காட்டல்களையும்......நேரடியாக க்கண்டித்து விளக்கம் வழங்கிடுமநற்பணிதுவக்கப்பட்டுள்ளது தனி அறிக்கைகளும், நூல்களும், வட ஆரிய வேதநெறியினரின் தவறுகளை திருத்தாமையால் இந்த சிறப்பிதழ் வெளிவருகிறது.

1. வட ஆரிய வேதநெறி துறவறத்தைச் சிறப்பாகக் கூறுகிறது. ஆனல், பதினெண் சித்தர்கள் இல்லறம்தான் அனைத்து பத்தி, சத்தி, சித்தி, முததி நிலைகளுக்கும் உரியது என்று மிகத் தெளிவாக விளக்கியுரைக்கிறார்கள்.

குறிப்பு: ''துறவியானவன் தனக்கு மட்டுமே நன்மை செய்து கொள்பவன என்பதால் இவன்கையால் அருளுறு பூசனை பொருட்கள் (திருநீறு, குங்குமம, பூ படையல்உணவுகள்)......முதலியவை பெறவே கூடாது. இல்லறம் ஏற்காது இளமையிலேயே! துறவியாகிறவர்களைப் பார்ப்பதும்பெரும் பாவமாகும். இவர்களைவழிபாட்டு நிலையங்களிலோ, வழிபாடுகளிலோ ஒதுக்கியும், விலக்கியும், கடைநிலையில் வைத்திருந்தால்தான் அருள் ஊற்றுக்கள் கெட்டுப்போகா! அருட்பயன்கள் குன்றிடமாட்டா!........''

என்பதுதான் அனாதி காலத்தில் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் இந்து மதத் தத்துவமாக வழங்கியவை. இந்து மதம் தோன்றி.........

38, 93, 084 ஆண்டுகள் ஆகின்றன.

(கிரேதாஉகம்: 1728000+திரேதாஉகம்; 1296000+துவாபரயுகம்: 8, 64, 000+ கலியுகம் 5,084)

வட ஆரியர்கள் இந்தியாவுக்குள் வந்தது, கலியுகம் பிறந்து ஆயிரமாண்டுகள் கழித்தே. சித்தர்கள் சமசுக்கிருத மொழியை [சம = தமிழிக்குச் சமமாக; கிருதம் = செய்யப்பட்டது—▷ சமசுக் கிருதம்) உருவாக்கியது. கலியுகம் பிறந்து மூவாயிரம் ஆண்டுகள் கழித்தே........... என்று சித்தர்களின் நூல்கள் வட ஆரியர் பற்றியும், அவர்களது சமசுக்கிருத மொழி பற்றியும் மிகமிகத் தெளிவாகக் கூறுகின்ற போதும்கூடத் தமிழர்கள் வட ஆரியர்களை இந்துமதத் தலைவர்களாகவும், சமசுக்கிருத மொழியை இந்துமதப் பூசை மொழியாகவும் ஏற்றுக் கெட்டலேகின்றனரே! இவர்களைத் திருத்திடப் பதினெண் சித்தர்கள் படைத்துச் சென்றுள்ள இந்து மதக் கலைகளையும் அறிவியல்களையும் கற்றுத்தந்து அருளை அனுபவப்பொருளாக ஆக்கிடல் வேண்டும். இதற்காகவே 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' 'அருட்பணி விரிவாக்கத் திட்டம்' 'உலக அருளாளர் திருச்சபை' 'அருளுலக ஆர்வலர் கழகம்'

—தொடரும்

ஞாலகுரு சித்தர் கருவூரர் அவர்களின் கோப்புகளிலிருந்து தொகுத்து
அளித்தவர்: தலைமைப் பொறுப்பாளர்: சி. கவிக்குமார்,
56, N G. O. காலனி, பொன்னேரி-601 204.

# இலங்கைத் தமிழர்களுக்கு........!

## இ. ம. இயின் இரண்டாவது தலைவர் சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமிப் பிள்ளையின் கருத்துரை:

தமிழர்கள் தங்களுடைய நாட்டுணர்வு, இன உணர்வு, மொழியுணர்வு, பண்பாட்டுணர்வு முதலிய அனைத்து உணர்வுகளையும், அன்னியர்களுக்கு நெடுங் காலமாக அடிமையாக்கி விட்டனர். அன்னியர்களின் கங்காணிகளாய், கூலிகளாய் வேலிகளாய்.... இருக்கின்ற போலித் தலைவர்களையே நம்பி வாழ்ந்து வருகின்ற, காரணத்தால்தான் தமிழினத்தின் உரிமையும், பெருமையும் உலகெங்குமே நலிந்தும், மெலிந்தும் அழியும் இழிநிலை செழித்தோங்கியிருக்கிறது.

இதனை மாற்ற ஒரேவழி தமிழினத்தின் அடிப்படையாகவும், உள்ளீடாகவும் இருந்து வரும் இந்து மதத்தை வள வளர்ச்சிப்பெற்று வலிமையான ஆட்சி பெறச் செய்வதுதான், உலக மதங்களுக்கெல்லாம், தாயான, 'இந்து மதத்தின்', மூலமாக. கருவாக, கருவறையாக, கருவூலமாக இருப்பவர்களே தமிழர்களும் தமிழ்மொழியும்.

தமிழர்கள், இதை உணர்ந்து இந்துமதத்தின் குருபீடங்களை, ஆச்சாரியார்களை, சன்னிதானங்களை அடையாளம் கண்டு அவர்களின் வழிகாட்டலில் விழுச்சியும், எழுச்சியும் பெற்றிடல்வேண்டும்.

# பிறந்த நாள் வாழ்த்து!

15 8-84 அன்று இளையசன்னிதானம் செந்தில்குமாரின் (குருதேவரின் மூத்த மகன்) பிறந்த நாள். அந்நன்னாளைக் கொண்டாடும் குருதேவர் குடும்பத்திற்கும் இளைய சன்னிதானத்திற்கும் இயக்கத்தின் சார்பிலும்அடியான் அடியாள் அடியார்கள் சார்பிலும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

(11-ம் பக்க தொடர்ச்சி)

மரணம் ''தெலுங்கானப் புரட்சி?, 'இராசகோபாலாச்சாரி தமிழக மார்க்சியச் சிந்தனைக்கு கட்டிய சமாதி?...............முதலிய பல நூல்களில் உள்ள கருத்துக்களை விமர்சிக்க புகுந்திருப்பவர் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும், 'இதைச்சார்ந்த பல அமைப்புக்களையும் என்னென்ன கூறுவாரோ தெரியவில்லை.

''... ...எல்லா மனிதரும் உழைப்பின் பயனை பகிர்ந்துண்டு போரற்ற ஒற்றுமையான அமைதிவாழ்வு வாழச் சிந்தித்த கார்ல்மார்க்சின் சிந்தனைகளைவிடப் பதினெண் சித்தர்களின் சிந்தனை, நிறைந்த பகுத்தறிவுப் போக்கும், பொதுநல நோக்கும், தீவிரச் சித்தமும் உடையது! உடையது!......'' என்ற பேருண்மையை உணர்ந்தால் கார்ல்மார்க்சுக்கு நவநாத சித்தர் என்ற பட்டம் கொடுக்கப்பட்டது சரியானது! முறையானது! நேர்மையானது.........என்று புரியலாம். —தொடரும்

# கேள்வியும் நானே.....! பதிலும் நானே.....!

**கேள்வி...1 ஶ்ரீ ஜயேந்திரஸ்வாமிகள்:** கிருஹஸ்தாஸ்ரமம் உள்ளவனுல் எல்லா தர்மங்களேயும் **அடையமுடியாது** என்று வேதம் சொல்கிறது என்கிருர். (ஆதாரம் ஜகத்குரு / ஜூலே / 1984 / பக்கம்66)-இது தான் இந்துமதக் கருத்தா?

பதில்! இது இந்து மதக் கருத்தல்ல! **இது வட ஆரியரின் வேத மதக்கருத்தேயாகும். வட ஆரியரின் வேதநெறி தான் இது!**

சங்கராச்சாரியார் மொட்டையடித்து, காவியணிந்து துறவியாக வாழ்வதால் உண்மையான இந்துமதப்படிமதக்குருவாக இருக்கமுடியாது பிறருக்குத் திருநீறுகூடக் கொடுக்கக்கூடாது. அறுபதாண்டு அகவை முடியும்வரை **இல்லறம்** ஏற்று பிறகு 'நீத்தார்' 'துறவோர்' 'அந்தணர்' 'அறவோர்' என்ற நிலேயை அடைபவரே குருவாக, குருக்களாக (குருவாசகம் படிப்பவராக) குருமாராக (குருவாக்கு ஓதுபவராக) மதத் தலேமையை ஏற்காலம். **இல்லறமே நல்லறம்** இதுதான் **இந்து மதம்.**

(2) 11 - 7 - 84 'ஜுனியர் விகடன்' வார ஏட்டில் வெளியாகியுள்ள எரிக்வான் டானிக்கன் கூறும் '**கடவுள்கள் வேறு கிரகத்திலிருந்து வந்தவர்கள்** என்ற கருத்து நம்முடன் ஒத்துப் போகின்றதே! விளக்க மென்ன?

நம்நாட்டவர் இன்னும் கருத்தளவில் மேல் நாட்டவர்க்கு அடிமையாகத்தான் இருக்கின்ருர்கள் இதுவரை குருதேவரும் ஆயிரக்கணக்கான அடியான்களும் **எரிக்வான் டானிக்கன்** கூறிய கருத்தை செயலளவில் மெய்ப்படுத்திப் பலவழிபாடுகளும் பரிகாரப் பூசைகளும் செய்துள்ளார்கள். செய்து வருகின்ருர்கள். இவைபற்றி பல நூருயிரம் புத்தகங்கள் அறிக்கைகள் அச்சிட்டு வழங்கியுள்ளனர் ஆனுல் தமிழகத்துப் பத்திரிக்கையாளர்களோ! வசதிமிக்க பத்தர்களோ! ஆர்வமிக்க ஆத்திகர்களோ இவற்றை உலக அளவில் விளம்பரப்படுத்த முன்வரவில்லே மேல் நாட்டில் 'டானிக்கன்' கருத்து 37மொழிகளில் இரண்டரைக்கோடி பிரதிகள் விற்றிருக்கின்றன. சித்தர்களின் கருத்துக்களே வெளியிட இங்கே வாய்ப்பே தரவில்லே.

(3) இ. ம. இயக்கம் தன்னுடைய கொள்கைகளேப் புத்தகமாக அச்சிட்டு வழங்கியும் குருதேவர் தமது ஒவ்வொரு கடிதத்திலும் இன, மொழி, நாடு, சமய மறுமலர்ச்சிக் கானக் கருத்துக்களே எழுதி வருகின்ற போதும் சிலர் இயக்கத்தையும் குருதேவரையும் குறை கூறி விலகுவதேன்?

கேள்வியிலே பதிலிருக்கின்றது. இதன் மூலம் தங்களேத்தாங்களே வெளிக்காட்டிக் கொள்கின்றனர். இவர்களே நம்பி நாம் எப்படி **அருட்படை** தயாரிப்பது?

இயக்கமும், குருதேவரும் **தலேமைச்** செயலாளர் வீரமாகாளி சன்னிதானமும் இயக்கத்தைப் பற்றியும், அ. வி. தி. செயல்பாட்டை பற்றியும் மிகத் தெளிவாகவே ஆரம்பக்கட்டத்தில் சேருகின்றபோதே கூறி வருகின்றனர். இருந்தும்சிலர் இயக்கத்தில் சேர்ந்து அருட்சத்தி பெற்றபின்னர் **குருவில்லாமல் தமக்கு எல்லாம் வந்துவிட்டது.** என்றும் **குருவே தேவையில்லே** என்றும் நினேக்கின்றனர் **குருவே துணே! குரு வாழ்க! குருவே எல்லாம்** என்று நினேக்கும் மனப்பக்குவம் உள்ளவர்களுக்கே அருளுலகமும் பொருளுலகமும் கிட்டும்! மற்றையோர் காலத்தாலே திருந்துவர். அதுவரை பொறுப்போம்.

## பதினெண் சித்தர்களின் வழிவந்ததே
# பஞ்சாப்பின் குர்பாணி!

—ஞாலகுரு சித்தர் கருவூரார்—

பதினெண் சித்தர்கள்தான் இம்மண்ணுலகிலுள்ள அனைத்து வழிபாட்டு நிலையங்களையும், வழிபாட்டுமறைகளையும் (குருவாக்கு), வேதங்களையும் (குருவாசகம்) முறைகளையும் (பூசாவிதிகள்) நெறிகளையும் (குருமார் ஒழுக்கம், ஆச்சாரியார், மரபு, பூசாறி, ஒழுகலாறு, குருக்கள் வாழ்க்கை) தங்களின் தாய்மொழியான தமிழ்மொழியினடிப்படையில் தோற்றுவித்தார்கள். இப்பேருண்மையினை உலக மொழிகளுக்கிடையிலும், மதங்களுக்கிடையிலும் 'ஒப்பியல் ஆய்வு' (Comparative study) நிகழ்த்தும் போது உணரலாம். குறிப்பாக மதத்துறையிலுள்ள சொற்களும் பூசை இலக்கியங்களும், பிறவும் இன்றுங்கூட கேட்ட அளவில் தமிழ்மொழிக்குரியனவாக இருப்பதை உணரலாம்.

தமிழிலுள்ள ஆழமானப் பொருளையுடைய அழகிய சொல்லே இசையைக் குறிக்கும்'**பண்**' இதனைஅடிப்படையாகக் கொண்டே '**பண்படுத்தப்பட்ட நிலம்**' '**பண்ணை**'. பண்படுத்தப்பட்ட வாழ்வியல் முறை '**பண்பாடு**'. பண்படுத்தப்பட்ட பூசை வகை, முறை, நெறி, விதி, சட்டம், பழக்கவழக்கம், ஒழுகலாறு முதலிய அனைத்துமே குருவால் உருவாக்கப்பட்டவை என்பதால் '**குர்பாணி**' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது.

இந்தியாவில் தோன்றிய அருளாளர்களில் மிகப்பெரிய திருக்கூட்டத்தை உருவாக்கிய அருளாளர் 'குருநானக்' ஆவார்கள். இவர் பதினெண் சித்தர்களின் வழியில் உருவான மிகப்பெரிய அருளாளர். இவரை, இ. ம. இயைத் தோற்றுவித்த கண்டப்பக்கோட்டை சித்தர் கருவூரார், சித்தர் ஏனம்பட்டியார், 'மூத்த சித்தர்' என்றும் 'நவநாத சித்தர்' என்றும் சிறப்பிக்கின்றார்.

'குருநானக்' அவர்கள் சித்தர்களின் முறைப்படி எழுதப்பட்ட குருவாசங்களையும் எழுதாக்கிளவிகளான குருவாக்குகளையும் உருவாக்கியே சீக்கிய மதத்தை உண்டாக்கினார். பதினெண் சித்தர்கள் படைத்த இந்துமதம் ஈன்றெடுத்த எண்ணற்ற மதங்களுக்குள் 'குருநானக்' ஈன்றெடுத்த தத்துவமும் ஒரு மதமேயாகும்

குருநானக் தான் உருவாக்கிய மதம் என்றென்றும் வளத்தோடும், வலிவோடும் பொலிவோடும், முழுமையான வாழ்வோடும், இருக்க வேண்டுமென்பதற்காக குர்பாணி முறையைக் கடைபிடித்திட்டார் அதாவது அவர் எழுதிய குருவாசகத்தைப் படித்துக்காட்டி மதத்தை வளர்க்கக் கூடிய **குருக்களையும்** அவர் உருவாக்கிய குருவாக்குகளை ஓதிக்காட்டி மதத்தை வளர்க்கும் **குருமார்களையும்** உருவாக்கினார். இவர்கள் இருவரின் (குருக்கள் குருமார்கள்)பணியே 'குர்பாணி.' எனவே 'குர்பாணி'. முறையில் இன்றைக்குவாழும் இந்து மதமே 'குருநானக்' உருவாக்கிய '**சீக்கிய மதம்**'.

குருக்கள்களும், குருமார்களும், பூசாறிகள்போல் அல்லாமல் கோயிலிலேயே தங்கியிருக்க வேண்டும் என்ற நியதியை உருவாக்கினார். இவ்விருவருக்குரிய உடை, உணவு, தங்குமிடம் முதலிய அனைத்தும் கோவிலுக்குள்ளேயே தரப்பட வேண்டுமென்றும் நியதி வகுத்திட்டார். எனவேதான் குர்பாணி முறையால் **சீக்கிய மதம்** வலிமையானக் கட்டுப்பாடுகளோடும் வளமையான சட்டத்திட்டங்களாலும் நிலையாக இருக்கிறது. இந்த முறை மீண்டும் இந்து மதத்துக்குள் வந்தால்தான் இந்துமதம் மறுமலர்ச்சியடைந்திடும்.

தமிழகத்தில் எல்லா வழிபாட்டு நிலையங்களிலும் குர்பாணி முறை **மீண்டும்** கொண்டு வரப்பட வேண்டும். அதாவது பகலில் ஆறுகாலமும், இரவில் ஆறுகாலமும், தவறாமல் முறைப்படி குருக்கள் குருவாசகம் **படிப்பதும்** குருமார்கள் குருவாக்கு **ஓதுவதும்** நிகழ்த்தப்படல் வேண்டும்.

இந்தக் குர்பாணி முறை மூலமே மீண்டும் தமிழக - இந்திய எல்லைக்குள் இந்துமதம் மறுமலர்ச்சியடையச் செய்திட முடியும்.

# சிந்திக்க......... சில செய்திகள்!

❁ உலகில் பிறமதங்கள் உள்ள நாடுகளில் மத அமைப்புத் தலைவர்கள் அந்த மத அமைப்புத் தலைவர்களுக்குள் தாக்கப்படுவதை கேட்டுள்ளோம்! படித்துள்ளோம்! இந்து மதம் தோன்றிய இடமான தமிழகத்தில்தான் பிறமதத்தினர் இந்துமதத்தின -ரைத் துன்புறுத்துவதைக் காண்கின்றோம். இதற்குக் காரணம் இந்து மக்களின் சகிப்புத் தன்மையா? இந்துக்களின் அடிமைத் தனமா?

---

❁ 'குருதேவர்' என்னும் நமது அறிக்கை 'காயந்திரி சிறப்பிதழ்' வெளியிட்ட -பின் தொடர்ந்து வரிந்து கட்டிக் கொண்டு பிரபல வார மாத, இதழ்கள் காயந்திரிக்கு பல்வேறு பொருள்கூறி திரித்து வெளியிட்டு வருகின்றன. அனைத்துச் செய்தி இதழ்களும் சமசுக்கிருத மொழியை தேவ மொழியாக ஏற்று அடிபணிந் -துள்ளதால் நம்மை வெளியுலகுக்குத் தெரியப்படுத்தும் துணிச்சல் இல்லாமல் போய்விட்டன! இனியாவது தமிழன் திருந்துவானா?

---

❁ பகுத்தறிவின் பாசறை, சிறைக்கஞ்சாச் சிங்கம், வைக்கம் வீரர், நாத்திகச் சிந்தனையாளர், பொதுவுடைமை விரும்பி தமிழினத் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் கட்டித் தந்து விட்டுச் சென்ற **பெரியார் திடலில்**, கிறித்துவர்களின் பேயோட்டுதல், வேதாகமம் ஜபித்தல் சமசுக்கிருதத்தில் மந்திரம் ஓதுதல் நடைபெறு -கின்றன. இவைகள் பகுத்தறிவுக்குத் திறவு கோலா? அன்றி தமிழினத் தந்தையின் தத்துவங்களுக்குப் பாடிவீடா?

---

❁ ஞாலகுரு சித்தர் கருவூரார் இம்மண்ணுலகின் வரலாறுகளை எல்லாம் காலக் கணக்கீட்டு அடிப்படையில் ஊன்றுகளோடும் சான்றுகளோடும் தமிழினத்துக்கு அள்ளி வழங்கிக்கொண்டிருக்கின்றார். இதை அறிந்தும் அறியாதவர் போல் ஒரு தொழி -லதிபர், இராமலிங்க அடிகளாரின் பத்தர், அமெரிக்கனுக்கு வரவேற்பு கொடுத்து விருந்து வைத்து வேடிக்கை நடத்தியுள்ளார்?! என்னே தமிழனின் அவல நிலை!

---

## எச்சரிக்கை

ஹிந்து முன்னணித் தலைவர்களில் ஒருவரான ராம. கோபாலன் மதுரை ரயில்வே ஸ்டேசனில் அரிவாள் கொண்டு தாக்கப்பட்டிருக்கிறார் பலத்த காயம் என்று செய்திகள் கூறுகின்றன

சில மாதங்களுக்கு முன்னால் பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்-தவர்கள் சிலர் தாக்கப்பட்டனர் ஒருவரின் கருத்துக்கள் அவருடைய பேச்சுகள் சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஏற்க முடியாதவையாக இருக்கலாம். சிலருக்கு மன வருத்தத்தைக் கூட அளிக்கலாம் இவையெல்-லாம் மிருகத்தனமாக நடவடிக்கைகளை நியாயப் படுத்தி விடாது.

நாகரிக உலகில்தான் வாழ்கிறோமா? என்ற சந்தேகத்தையே இம்மாதிரி வன்முறை நிகழ்ச்சிகள் ஏற்படுத்தி விடுகின்றன. ராம. கோபாலன் தாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம். உடனடியாக குற்றவாளி மீது தகுந்த நடவடிக்கை எடுப்பது தமிழக அரசின் கடமை.

-இந்து மறுமலர்ச்சி இயக்கம் இதை வழிமொழிகின்றது

**(நன்றி துக்ளக் 1-8-84)**

# அன்புள்ள சேவுக.....!

அன்பு சேவுக!

உனக்கு நான் மடல் வரையும் போதெல்லாம் என்னுடைய சுமையை நான் நினைத்துப்பார்க்கிறேன் ஓராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னுல் பீடாதிபதியாக பதவியேற்றிருக்கும் நான் என்னை முழுமையாக வெளிப்படுத்தி ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம்! ஏராளம்! ஏராளம்! அவற்றில் ஒரளவு உன்மூலமாக யாம் இச் சமுதாயத்திற்கு வழங்கி வருகிறோம்.

கடந்த பத்தாண்டு கால இடைவெளியில் நமது குருகுலம் பொட்டலாக இருந்தது மாறி இன்றுமெல்லவளம் பெற்று செழிக்கத் துவங்கியுள்ளது இதற்கு உனது உழைப்பு,உனதுஅமைதி அடக்கம்,பணிவு, பாசம், பற்று, கனிவு, பொறுமை, எதையும் தாங்கி செயல்படும் உணர்வுதான் காரணம் இவற்றை இவ்வியக்கத்தில் உண்மையுடன் செயலாற்றும் ஒருசிலரே அறிவர் இந்த நீண்டகால இடைவெளியில் நீ பல்லாயிரம் மக்களை பலவகைப்பட்ட மக்களை சந்தித்துப் பழகியிருக்கின்றாய்! புற்றீசல் போல்,ஈக்கள் போல் நம்மீது வந்து மொய்த்து ஊடாடி சென்றோர் எண்ணற்றோர் அவரெல்லாம் இன்று விலகி வாய்மூடி மௌனியாகி இராமல் பழிகூறி தூற்றிவரும் துரோகத்தனத்தைப் பார்க்கின்றோம்!

மனம் சலித்து உடல் தளர்ந்து உணர்வு இழந்து நாம் தவக்கோலத்தில் ஆழ்ந்து விடுவோமானுல் ஆற்ற வேண்டிய அரும் பணிகள் என்னவாவது? தனியொரு மனிதனுக்காக நாம் கூனிக்குறுகி வெட்கித் தலைகுனிந்து சென்றால் விதிவசத்தாலோ மயக்க நிலையாலோ, கூலிமனப்பான்மையோடும் துரோக மனப்பான்மையோடும் வளர்ந்து வரும் நமது தமிழினத்தை எவரோ காப்பர்?

எனவேதான் அன்பு நண்ப!

நாம் நாள்தோறும் தேனீக்கள் போல் அயராது ஆற்றவேண்டியப்பணிகளைகாலம் வரும் என்றும் பொருள்தேடிவரும் என்றும் புரவலர் வருவர் என்றும் காத்திராமல் தமிழகம் எங்கணும் உள்ள நமது அடியான்கள் இயக்கக் குறிக்கோள்களை, கொள்கைகளை, திட்டங்களை கையெழுத்துப் படிவங்களாக ஆயிரக் கணக்கில் நாடோறும் எடுத்து நானிலம் எங்கும் அனுப்பி வருகின்றனர்

இந்தத் தியாகங்களுக்கு முன்னுல் இத்தகைய உழைப்புகளுக்கு முன்னுல் நாம் நடை போடுகிறோம் என்பதை உணர்ந்து செயல்படுக! நாம் அன்றும் இன்றும் என்றும் மொழிக்காக நாட்டுக்காக இனத்துக்காக சமயத்திற்காக என்ன செய்து வருகின்றோம்?என்ன செய்யப்போகின்றோம் எப்படிச் செய்யப் போகின்றோம்! என்பதைத் தெளிவாகக் கூறியேச் செயல்பட்டு வருகின்றோம்

எனவேதான் நம்மிடையே கருத்துக் குழப்பம் இல்லை! கொள்கைக் குழப்பம் இல்லை அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலென்றே வருமுன் வருவதை எரிமுன்னர் வைத்தது போல் ஆகிவிடக்கூடாதே என்று குரு நிலையில் நின்று பலநூறு வேண்டுகோள்கள் விடுக்கின்றோம்

உணர்ந்தவர் மீண்டார்! உணராதார் மாண்டார்!

அன்பு

ஞால குரு

சித்தர் கருவூரார்

---

**தனி மனித விழிச்சியே தமிழினத்தின் எழுச்சி!**
**தமிழினத்தின் எழுச்சியே இந்துமத செழுச்சி!**
**இந்துமத செழுச்சியே இந்தியாவின் வளர்ச்சி!**

# விளக்கமடல்

1984 சனவரித் திங்கள் செம்மலர் மாத இதழில் [சரம் 14, மலர் 9 பக் 3-7] சித்தர் நெறியினர் கார்ல் மார்க்சை 'நவநாத சித்தர்' என்று குறிப்பதையும்; பெரியார் ஈ. வே. ரா. வைச் 'சொல்லடி நாயனார்' என்று குறிப்பதையும் கடுமையாக விமாசித்து 'வேஷங்கள்' 'சி.ஐ.ஏயும நவீன மதப்பிரச்சாரங்களும்' என்று சாடியுள்ளனர்

1. இப்புவிப்பரப்பில் ஏழை எளிய பாட்டாளிப் பாமர மக்களின் பசி போக்கிட நிலையான தத்துவமும் செயல்சித்தாந்தமும் கம்யூனிசம் என்ற பெயரில் வழங்கப்பட்டுள்ளது இதனை உருவாக்கிய கார்ல்-மார்க்சு பழைய ஏற்பாடு என்ற கிறித்துவ வேதத்தில் [Old Testament] விண்ணவர்களிடமிருந்து 'பத்துத் தெய்வீகக் கட்டளை' [The Ten cammandments] பெற்று வந்த மோசேயின் [MOSES] மறு அவதாரமே

2. "......... சமுதாய ஏற்றத்தாழ்வு, வேறுபாடு, பகை, சுரண்டல், பசித்தோர் துன்பம்......... முதலியவைகளைத் தீர்ப்பது -தான் தந்தையாகிய இறைவனுக்கு நன்றி செலுத்துவதாகும்......" என்ற வசனத்தை வாழ்நாள் முழுதும் முழங்கி சிலுவையில் மாண்டு, பரமண்டலத் தந்தையால் மீண்டும் உயிர்த்தெழுந்த தேவ குமாரரான இயேசுவின் மறு அவதாரமே பாட்டாளி வர்க்கத்தின் இல்லாமை, இயலாமை, வறுமைக் கொடுமைகளை அகற்றிடப் புரட்சி செய்து வெற்றி பெற்ற புரட்சிப் பெருவீரர் விளாதிமீர் இலிச் இலெனின் ஆவார்

3. உலகின் உறங்கும் மனிதரான சீனர்களை உசுப்பி எழுப்பி உலகின் இரண்டாவது மாபெரும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரப் பேரரசை நிறுவிய மாசே-துங்கின் அகபுற வாழ்வியல்கள் அவர் சித்தர்களில் ஒருவரான போகரின் மறு அவதாரமே என்ற பேருண்மையினைத்தான் விளக்குகின்றன

-மேற்கூறிய மூன்று கருத்துக்களையும் வழங்கியவர் அமெரிக்க உளவாளிகளோ! சி. ஐ. ஏ. நிறுவனத்தாரோ! மதப் பிரச்-சாரகரோ! வேஷதாரியோ! முதலாளித்-வக் கூலியோ! மத வெறியரோ! மூட நம்பிக்கை மிகுந்த அப்பாவியோ! அல்ல! அல்ல! அல்ல! அல்லவே அல்ல-ஆனல் இம்மண்ணுலகம் வியக்க மாபெரும் புரட்சி செய்து ஏழை எளிய பாட்டாளிப் பாமரர் துயர்துடைக்கச் சோசலிச அரசை நிலை-நாட்டிய புரட்சித் தலைவர் விளாதிமிர் இலிச்சின் பெரும் பாராட்டுதலுக்கும், அன்புக்குமுரிய மிக நெருக்கமான நண்பர் அறிவியல் மேதை, உலகக் கம்யூனிச இயக்கம் [The International Communist Party] என்ற ஓர் அமைப்பை திரு. இலெனின் புரட்சியில் வெற்றி காணு முனபே செக்கோசுலோ வேக்கியா நாட்டை மையமாகக் கொண்டு அமைத்த பொது-வுடமைச் சித்தாந்தச் செயல்வீரர், பகுத்-தறிவுக் குடியரசு இயக்கம் (The Radical Democratic Party) அமைத்தவர்......என்ற புகழுக்கும் சிறப்புக்களுக்குமுரிய திரு. எம். என். ராய் அவர்களேயாவார் இரசியப் புரட்சியிலும் பங்கு பெற்றவர் இவர்

இவரைத்தான் திரு. இலனின் அவர்கள் சீனப்புரட்சித் தலைவரான மாசேதுங்குக்கு வழிகாட்டியாக அனுப்பி-னார். இவரைச் சீனக்கம்யூனிச இயக்கச் சிற்பிகளுள் ஒருவர் என்று பாராட்டும் மரபு இன்றும் இருக்கிறது. இவர், மிகப்பெரிய பகுத்தறிவு வாதி, அறிவியல் மேதை என்பதால் அணு ஆராய்ச்சித் தந்தை டாக்டர் ஐன்சுடீனின் நண்பர். இவர் அந்த விஞ்ஞானியோடு சேர்ந்து 'உலக மத ஆய்வுக்குழு' (The World Religious Research Society) என்ற ஒன்றை நிறுவி-னார். இவரது நெருங்கிய நண்பரே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் ஈடு இணையற்ற இரண்டாவது தலைவர் சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமி பிள்ளை (M. P. Pilli and M. N. Roy founded The Internatonal Cammunist Party The Radical Democratic Party and The Study Circle of the main Camps) இந்தச் சித்தர் காகபுசுண்டர் எழுதியுள்ள கார்ல் மார்க்சு வரலாறு திரு. இலெனின் வரலாறு, திரு. ஸ்டாலின் வரலாறு (Stalin) திரு. மாசேதுங் வரலாறு இரசியப் புரட்சி வரலாறு, சீனப் புரட்சி வரலாறு, இந்தியாவில் புரட்சி ஏன்? எப்போது? எப்படி? (மூன்று தொகுதி)? இந்தியாவில் புரட்சிக்குப் பின் (நான்கு தொகுதி)? 'தோழர் M. N. ராயின் வரலாறு' 'இந்திய மண்ணில் மார்க்சீய

—6-ம் பக்கம் பார்க்க



# இந்து மறுமலர்ச்சி இயக்க வளர்ச்சி நிலை விளக்கம்

## குருதேவர், ஞாலகுரு சித்தர் கருவூரர் அறிவிப்பு

## பெரியார் ஈ. வெ. ரா வை கௌரவத் தலைவராக ஏற்றல்

### இ. ம. இயின் இரண்டாவது தலைவர் சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமி அவர்களின் சில கருத்துக்கள்

1 நாயன்மார்களும், ஆழ்வார்களும் பெற்றுத்தரமுடியாத உயர்ச்சியை இந்து மதத்துக்கு பெரியார் ஈ. வெ. ரா. ஈட்டித் தந்தார் என்பதை உணர முற்படுங்கள்.

2 பெரியார் ஈ. வெ. ரா வின் வழியில் இந்துமத மறுமலர்ச்சிப் பணிகள் நிகழ்ந்தால்தான் மதமடமைகள், சுரண்டல்கள், ஆபாசங்கள், பயனற்றவைகள், தவறுகள் முதலியவை அகற்றப்படும். பின்னர் தான் பதினெண் சித்தர்கள் படைத்த ‘சித்தர் நெறி’ யெனும் இந்து மதத்தின் பயன்கள் உலகுக்குத் தெரியும்.

3 ‘‘பதினெண் சித்தர்கள் படைத்த பகுத்தறிவு நிறை இந்து மதம்’’ பார்ப்பனரால் பாழ்ப்பட்டது’’ என்ற பேருண்மையைப் பறைசாற்றிய பெரியாரைப் புரிந்து செயல்படுவதுதான் தமிழ்மொழி, இன, பண்பாட்டு, நாகரீக விடுதலைகளை நல்கும்! நல்கும்!! நல்கும்!!!

4 பெரியார் ஈ. வெ. ரா. தான் ‘‘சமசுக்கிருதமொழி இந்து மத பத்திநெறி சத்திநெறி, சித்தி நெறி, முத்தி நெறி........ முதலிய அனைத்துக்கும் சாவுமணி அடித்துவிட்டது’’ என்பதனைத் ‘தமிழ்மொழியில்தான் அருட்சினை’ செய்யவேண்டும் என்ற கருத்தால் தெளிவாக விளக்கினர்.

5. பெரியார், ‘‘உண்மையான இந்து மதத்தின் செழுச்சியால்தான் இனவிடுதலைகள், மொழி விடுதலைகள், பண்பாட்டு உரிமைகள், பொதுவுடைமைகள் விளைந்திடும்’’ என்றதை ஆராய்ந்துணர முற்படுங்கள்.

தவத்திரு கைவல்ய சுவாமிகளும், அருள்மிகு கடலூர் ஞானியார் சுவாமிகளும், சித்தர் காகபுசுண்டரும், மறைமலை அடிகளாரும், மெய்வழிச் சாலை ஆண்டவரும், பரஞ்சோதி மகானும், பெரியகுளம் மௌனச் சாமியாரும், வடுக்கப்பட்டி தாத்தா சாமியாரும், திருவையாறு நிர்வாண அடிகளாரும், தஞ்சை வடவாற்றங்கரை மடத்தடிகளும், திருவண்ணாமலை பலாக்காக் காட்டு கோவணச் சாமியும், குன்றக்குடி அடிகளாரும்......... இந்து மத மறுமலர்ச்சிப் பணிகளைப் ,பகுத்தறிவுப் பகலவன், தந்தைப் பெரியார், ஈ. வெ. ரா. வால்தான் செய்ய முடியும் என்ற பேருண்மையை உணர்ந்து தங்களின் பேராதரவை வழங்கினர்கள்.

மேற்கண்ட ஆய்வுமுடிவுகளின் மேல் 1984 ஜூனில் கூடிய இ.ம.இ.யின் பொதுக்குழு பல பெரிய விவாதங்களை நிகழ்த்தியது. அதன்படி,

**1. இயக்கத்திற்கு தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்களை கௌரவத் தலைவராக ஏற்றல் 2. பெரியாரின் அடியொற்றி கருஞ்சட்டையில் சமுதாயப் பணிகளை நிகழ்த்த வேண்டும் 3. குருதி வண்ணச் சிவப்பு உடையில் சமயப் பணிகளை ஆற்ற வேண்டும் எனத் தீர்மானித்தது.**

**இந்து மதத்தை ஈன்றெடுத்த தமிழினமே தன்மானங்காத்த மாவீரர் பெரியாரைக் குருவாக ஏற்றிடு!**

---

KVS பிரிண்டர்ஸ், 10, தேரடி தெரு, பொன்னேரி.